விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 150 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 04 புதன்கிழமை (18.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை

## 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று

- பேதங்களைக் கடந்து ஒன்றிணையுமாறு அழைப்பு
- முற்பகல் 10.30 மணிக்கு ஈகச் சுடரேற்றல்
- மாலை 6.00 மணிக்கு ஆலயங்களில் ஒலி எழுப்புதல்


கோப்புப் படம்

(15 ஆம் பக்கம் பார்க்க)

### பெரமுனவின் இரு எம்.பிக்கள் நேற்று கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான மிலன் ஜயதிலக மற்றும் சனத் நிஷாந்த ஆகியோர் குற்றப் புல 15

### தேவையின்றி பெற்றோலுக்காக வரிசையில் காத்திருக்காதீர்

(கொழும்பு)

அத்தியாவசிய தேவையின்றி பெற்றோலுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என இலங்கை பெற 15

### இன்றுமுதல் எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

இன்றுமுதல் சமையல் எரிவாயு சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இரண்டு எரிவாயு 15

## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் செல்லமுடியாதவர்கள்

### யாழ். பல்கலையில் அஞ்சலி செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் செல்ல முடியாதவர்கள் யாழ். பல்கலையில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி செலுத்தலாம் என பல்கலை மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று மதியம் 2.30 மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தலில் ஈடுபடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-33,104)

### மின்சாரம், எரிபொருள், தண்ணீரை மட்டுப்படுத்த
## தேவையான அரச ஊழியர்களை நிறுவனத்துக்கு அழைக்க முடிவு

(கொழும்பு)

மின்சாரம், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றை மட்டுப்படுத்த தேவையான அரச ஊழியர்களை மாத்திரம் நிறுவனத்துக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொலைதூரத்தில் இருந்து பணிக்கு வரும் அரச உத்தியோகத்தர்களை அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பணியிடத்திற்கு தற்காலிகமாக இணைத்துக் கொள்ள தேவையான அதிகாரங்களை வழங்குமாறும் நிறுவ 15

### வரணியில் விபரீத முடிவெடுத்த முதியவர் மரணம்

(சாவகச்சேரி)

வரணியில் விபரீத முடிவெடுத்த முதியவர் உயிரிழந்துள்ளார். கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி நாவற்காட்டு பகுதியில் தனிமையில் இருந்த முதியவர் ஒருவர் நேற்று செவ 15

## சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட நிலையியற் கட்டளையை இடைநிறுத்தும் பிரேரணை

### 51 மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற நிலையியற் கட்டளையை ரத்துச்செய்து ஜனாதிபதியின் மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் யோசனையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது தொடர்பான பிரேரணை நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் 51 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

சுமந்திரன் எம்.பியால் கொண்டுவரப்பட்ட இந்த யோசனைக்கு ஆதரவாக 68 வாக்குகளும் எதிராக 119 வாக்குகளும் அளிக்கப்பட்டன. சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்து எதிரணியில் அமர்ந்துள்ள 15

### யாழ். மீனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்கப்பட் 15

## குண்டர்கள் அனைவரும் இரு நாட்களில் கைது

### பொலிஸ்மா அதிபர் உறுதி

(கொழும்பு)

அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கிய அனைவரும் அடுத்த இரண்டு நாட்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன உறுதியளித்துள்ளார். 15

## அமரகீர்த்தி வெற்றிடத்துக்கு

### ஜகத் சமரவிக்ரம நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள படுகொலை செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட 15

## பிரதி சபாநாயகராக அஜித் ராஜபக்ஷ தெரிவு

(கொழும்பு)



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ 109 வாக்குகளைப் பெற்று பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்
முன்னாள் பணிப்பாளர் சபை
உறுப்பினராகிய

**திரு.அ.கோபாலகிருஷ்ணன்**

அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து, அவரது ஆத்மா
சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.



**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,**
**இல்லப்பிள்ளைகள், பணியாளர்கள்**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

(C-4329)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## Golden opportunity for a prosperous and Prestigious Career



- A nationally established UK organizations is seeking to recruit a particular type of candidates to maintain their Global Database.
- A compulsive attitude to details and accuracy with an analytical mind are more important than a University degree. Employment will be confirmed after an initial 3 months of paid training.
- Successful candidates will be working locally not far away from your respective residences.

(C-4332)

Please forward your CV to joseph.vilvaraj@gmail.com


## மரண அறிவித்தல்

# கதிர்காமு சரஸ்வதி



யாழ்ப்பாணம் அரிச்சந்திரன் வளவு, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு சரஸ்வதி அவர்கள் 16.05.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பார்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற பத்மாவதி, இராசமலர், திலகவதி, Dr.சின்னத்தம்பி (நியூசிலாந்து), சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தம்பிஐயா, பாலகோபாலன், Dr.யோகவதனி (நியூசிலாந்து), Dr.ஜெயராணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் கவிதா (அவுஸ்திரேலியா), Dr.காண்டீபன் (பொது வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), கங்கைவேணியன் (அவுஸ்திரேலியா), காயத்திரி (அவுஸ்திரேலியா), பூங்குழலி (விரிவுரையாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), Dr.கோகுலன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), கபிலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் Dr.மதுராந்தகன் (அவுஸ்திரேலியா), கரிகாலன் (நியூசிலாந்து), அஸ்வின் (அவுஸ்திரேலியா), சோபா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மூத்த மாமியும் யோகேந்திரா (அவுஸ்திரேலியா), Dr.தர்ஷிகா (மந்திகை ஆதார வைத்தியசாலை), மனோஜா (அவுஸ்திரேலியா), அரவிந்தன் (அவுஸ்திரேலியா), சிறிசங்கீர்த்தனன் (அவுஸ்திரேலியா), காயத்திரி (நியூசிலாந்து) ஆகியோரின் பெரிய மாமியும் தருண், கவின், கருண், தர்மிகன், தானியா, வியன், ஆரணன், ஆதிரா, கிரிஷரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.05.2022) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (19.05.2022) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புலோலி தெற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரிச்சந்திரன் வளவு,
புலோலி தெற்கு, புலோலி.

(11412)

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



# கந்தையா சிவஞானம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1953.11.05 | 16.05.2022 |

அல்வாய் கிழக்கு அத்தாயைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கு பத்தானையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவஞானம் அவர்கள் நேற்று முன்தினம் (16.05.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் மிதிலாதேவியின் பாசமிகு கணவரும் தங்கவேலாயுதத்தின் பாசமிகு சகோதரனும் கௌரிதேவியின் பாசமிகு மைத்துனரும் பிரதீபன், கார்த்திகாயினி, பார்த்தீபன் (2008ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்), செல்வதீபன் (மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக்கழக இயக்குநர் - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாஸ்கந்தன், ராதிகா, புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கமலினி (லண்டன்), மாலினி (கனடா), பாலமுரளி (லண்டன்), ஜெயந்தினி, ராஜினி, தர்சினி, நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் (இளையய்யா) துஸ்யந்தன் (பிரான்ஸ்), சாயினி, தர்சினி, சம்யுதா, நிலோஜன், மிலதீபன், ஆர்த்திகா, ஆபனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.05.2022) புதன்கிழமை காலை 10 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று கருகம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4328)

தொடர்புகளுக்கு
தங்கவேலாயுதம் சகோதரன் 0094775491216 (இலங்கை)
செல்வதீபன் மகன் 0041789554617 (சுவிஸ்)
துஸ்யந்தன் பேரன் 0033 753052164 (பிரான்ஸ்)
வேணுகானன் மருமகன் 0094 777885307 (இலங்கை)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொள்ளுங்கள்

## நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அழைப்பு

(முல்லைத்தீவு)

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளில் அச்சமின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய காலகட்டத்தில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் மக்கள் முடங்கி இருந்த காலப்பகுதியிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் கொன்றொழி க்கப்பட்ட தமிழின படுகொலை யின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாராளுமன்றிற்கு சமூகமளிக்காத மகிந்த, நாமல்



(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற பதற்றநிலையை அடுத்து மகிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படைத் தளத்தில் பாதுகாப்பாக தங்க்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அரசாங்கத்திற்கெதிராக தொடர் போராட்டங்கள்

# இன்று முதல் ஆரம்பம்

## தொழிற்சங்க ஒருங்கிணைப்புக்குழு அழைப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் இன்று முதல் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்க ஒருங்கிணைப்புக் குழு இவ் அழைப்பை விடுத்துள்ளது.

- திருடர்களை பாதுகாக்கும் டீல் வேண்டாம்.
- தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டிய மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும்.
- அரசாங்கத்தின் பழிவாங்கும் செயலை உடனே நிறுத்த வேண்டும்.

என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று முதல் நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்கு திரும்பியது

(கொழும்பு)

ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவையின் கீழ் கடவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கி வருகை தருவது கட்டாயமானதாகும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதற்காக, www.immigration.gov.lk எனும் இணையத்தளத்தினூடாகவோ அல்லது 070 710 1060 எனும் தொலை பேசி இலக்கத்தையோ பயன்படுத்துமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதாயின், அரச கடமை நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கடவுச்சீட்டிற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படும் மற்றும் கடவுச்சீட்டுக்களின் கையிருப்பு முடிவடைவதாக பரவும் வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)


23 ம் பிறந்தநாளும் 504 நாள் நினைவலைகளும்

அமரர்.

லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

யா/வசாவிளான் மத்திய கல்லூரி மாணவன் உயர்தரம்-2018



புன்னை நகர் மண்ணிலே தவழ்ந்து விளையாடிய கபிலன் நீ எங்கே
உன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாள் வரும் என்றால் எங்கள் வீடு
விழாக்கோலம் பூனுமே. உன்னுடைய தம்பி தங்கைமார் எல்லாம்
அதிகாலையில் வாழ்த்து சொல்லுவார்களே. தம்பி கபிலன் 21 ஆவது பிறந்தநாள்
கொண்டாட இருந்த வேளை தம்பி கபிலனை கொடிய நோய் காவு கொண்டதே.
கொடிய ஆண்டவன் நாங்கள் கதற கதற பறித்து சென்றவனே.
எங்கள் கூட்டில் இருந்த தம்பி கபிலன் திசைமாறி பறந்தாயே.
நாங்கள் சிந்திய கண்ணீர் இயற்கையும் கண்ணீர் வடித்தது.
பூமியும் ஒரு நொடி சுழல மறுத்தது. தம்பியின் பிறந்த நாள் பரிசாக அப்பாவின்
அரவணைப்பும் முத்தமும் என்றும் பிறந்தநாள் பரிசாக தம்பி கபிலனுக்கு இருக்கும்.
நாங்கள் இந்த பூமியில் இழந்த மிகப் பெரிய சொத்து தம்பி கபிலன் தான்.
தம்பி நட்ட மாமரமும் பூக்கவில்லையே. தம்பி வரட்டும் என்று காத்திருக்கின்றது.
விதிகளை மீறி வந்து விடு எங்கள் வீட்டுக்கு தம்பி கபிலன் வருவாய் என காத்திருக்கின்றோம்.
கபிலனின் அழகிய திருமுகத்தில் வெறும் வேதனை வலிகளைத்தான் அப்பா பார்த்தேன்.
கபிலனின் அழகிய திருமுகத்தில் வெறும் வேதனைத் துளிகளைத்தான் அப்பா பார்த்தேன்.

புன்னாலைக்கட்டுவன்,
தெற்கு.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

(11405,C-4327)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ் - 2022

## தகுதிகாண் போட்டியில் AB அணி வெற்றி



AB விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் 50 பந்து பரிமாற்றங் களை கொண்ட துடுப்பாட்ட தொட ரில் 3 ஆவது போட்டி கடந்த 13 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் AB அணி, அரியாலை சென்றல் அணியை 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய AB அணி 40.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஞானா நந்த சர்மா-43, சிலோஜன்-26, ராகுலன்-25, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை சென்றல் அணியில் சுஜீ வன்-03, சதீஸ்-02, சிறிராம், லின்துஜன், சின்துஜன் தலா-01 விக்கெட்டைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 26.3 ஓவர்களில் சகல விக்கெட்டையும் இழந்து 81 ஓட்டங் களை மாத்திரம் பெற்றனர்.

சின்துஜன்-14, சிறிராம்-26, சரவணன்-12, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் AB அணி சார்பாக சிலோஜன்-05, ஞாநாநந்த சர்மா-03, லிங்கநாதன், ராகுலன் தலா-01 விக்கெட்டினை கைப்பற்றினர். (4)


## விற்பனைக்கு

விளக்குமாறு. துருவபலகை. சிரட்டை அகப்பை, இருபலகை என்பவற்றை மொத்த வியாபாரிகள் பெற்றுக் கொள்ளலாம்.
♦சிரட்டை, ஈர்க்கு, பேணி கொள்வனவும் செய்யப்படும்.

077 210 5286
077 559 1778

(11413)


# பஞ்சாப்பை வீழ்த்தியது டெல்லி கப்பிட்டல்ஸ்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 64 ஆவது லீக் போட்டியில், டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப் போட்டியில், டெல்லி கப்பிட்டல்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 160 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, பந்துவீச்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய சர்துல் தாகூர் தெரிவு செய்யப்பட்டார். (4)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள் மற்றும் துரித மீட்டல் வகுப்புக்கள் - 2022

- கலை முதற் தேர்வு - 2022 (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு- 2022 (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- வணிக முதற் தேர்வு - 2022 (புதிய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
- இசைமாணி/ நடனமாணி முதலாம் வருடத் தேர்வு - 2022 (இறுதிச் சந்தர்ப்பம்)

மேற்படி பரீட்சைகளுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மே மாத இறுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் தோற்றும் பாட அலகொன்றிற்காக செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 2500.00 இனை மக்கள் வங்கி கணக்கிலக்கம் **890002340002319** இல் செலுத்தி பற்றுச் சீட்டின் மூலப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **22.05.2022 (ஞாயிற்றுக்கிழமை).** மேலும் பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக (www.codl.jfn.ac.lk) அறியத்தரப்படும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(C-4333)

பதிவாளர்
17.05.2022



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020
- மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் யூலை மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **03.06.2022 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணிவரை) சமர்ப்பிக்கலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(C-4334)

பதிவாளர்
17.05.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லூன்றிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி விநாயகராலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும். தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும். மே மாதம் இருபத்தொன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும். கொரோனா தொற்றுநோய் காரணமாகக் கடந்த இரண்டு ஆண்டுகள் மஹோற்சவம் நடைபெறாதமைக்கான பிராயச்சித்தமாக பத்தொன்பதாம் திகதி வியாழக்கிழமை காலை ஒன்பது மணி முதல் சாந்தி ஹோமமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் காலதீத சம்புரோட்சண மஹாகும்பாபிஷேகமும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (4)

# மாமனிதர் ரவிராஜ் உருவச்சிலைக்கு அஞ்சலி



(சாவகச்சேரி)

இன விடுதலையைத் தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணத்தின் போது சாவகச்சேரியில் அமைந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம் சாவகச்சேரியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் வந்தடைந்த நிலையில் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள ரவிராஜின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் வேலன் சுவாமிகள் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கு பற்றி பின்னர் முள்ளிவாய்க்கால் நோக்கிய தமது பயணத்தை தொடர்ந்தனர். (4-30)

# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 09 | | 11 |
| - | | - |
| 12 | | 05 |
| - | | - |
| 1940 | | 2022 |



## சிவத்திரு.பொன்னையா பரமேஸ்வரன் (சிவம்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் (சிவம்) அவர்கள் கடந்த (11.05.2022) புதன்கிழமையன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா நாகம்மா தம்பதியினரின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பராசக்தியின் ஆருயிர்க்கணவரும், காலஞ்சென்ற சரஸ்வதியின் ஆசைத்தம்பியும் மற்றும் மோகன் (கொலன்ட்), ஜெயந்தி (ஜேர்மனி), குகன் (கண்ணன் டென்மார்க்), குமாரதாசன் (ஜேர்மனி), யசோதா (லண்டன்), சுஜாதா (ஜேர்மனி), சுஜீதா (ஜேர்மனி), ஜெயபாரதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விஜயலக்சுமி, கணேசலிங்கம், ஜெயலக்சுமி, அஜந்தினி, ஸ்ரீகண்ணதாஸ், ஆதவன், காலஞ்சென்ற பிரபாகர் மற்றும் பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், சரவணன், சிவகாமி, ஜெயமேகலா, நிவேதன், கரீஷன், பிரசாந்த், ஜெய்பிரவீன், ஜெய் பிரவீனா, பௌசியா (பூஜா), அரவிந்த், லக்ஷயன், பிரக்கியா, ஜெயமயூரன், அஸ்வினி, ஜெய்சாந்த், சாருஷன், கஜேந்தினி, கார்த்திகா, சஜீவன், கனுஜா, பவ்யா, லக்ஷயா, பிரஜீன், காசினி, விகீர்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூதத்தம்பி, காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் தங்கப்பொன், சோமாவதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திராதேவி, குமாரசாமி, காலஞ்சென்ற தளையசிங்கம் மற்றும் உலகநாதன் ஆகியோரின் சகலனும், பாலேந்திரன், விஜயா, கண்ணன், புஸ்பா, சிவகுமார், பாஸ்கரன், துஷாகரன், இந்திரதயாளன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், திபாகரன், கிருபாகரன், ரூபாகரன், கஜேந்திரன், ஜெயப்பிரியா, ஜெனார்த்தனன், ஜெகணிவாஸ் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2022) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் 9.00 மணிக்கு நடைபெற்று 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணைக்கு அருகிலுள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

(11408)

திருநெல்வேலி,
தலங்காவற் பிள்ளையார் கோவிலடி.

தொடர்புகளுக்கு
076 592 4757

தகவல்:
குடும்பத்தினர்.

# 45ம் நாள் நினைவஞ்சலியை இன்று நினைவுகூருகின்றோம்

## அமரர்.தர்மலிங்கம் சதீஸ்



குடும்பத்தின் ஒரேயொரு ஆண் வாரிசான தம்பி சதீஸ் அவர்களின் உயிரை மின்னல் வேகத்தில் இயமன் வாகனத்தில் வந்து பறித்து விட்டான். உற்றார், உறவினர்கள் கூப்பிடுகின்ற நேரத்தில் உதவி ஒத்தாசைகளை வழங்கும் பக்குவத்தினைக் கொண்ட சதீஸ் அவர்களின் இழப்பு அன்னாரின் குடும்பத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் இன்றைய 45ம் நாள் நினைவஞ்சலியில் அன்னாரினை நினைவுகூருவதோடு அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (11410)

பிறப்பு :- 17.05.1985
இறப்பு :- 04.04.2022

பரிபாலன சபை
ஊரெழு கிழக்கு நாவலம்பதி,
ஞானவைரவர் திருக்கோயில்.

# இராசிபலன்

18.05.2022
வைகாசி 04, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 3.27 மணிவரை

கேட்டை முற்பகல் 11.06 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

திருஞான சம்பந்தர் குருபூஜை
சந்திராஷ்டமம் - கார்த்திகை

வளவன்


மேஷம்

பெரிய மனிதர்களின் ஆசியை பெறுவீகள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.


ரிஷபம்

சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.


மிதுனம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.


கடகம்

சுப நிகழ்வுகளில் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம்.


சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபார விருத்தியுண்டு.


கன்னி

கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், காலை நேரத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.


துலாம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும், அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.


தனுசு

சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.


மகரம்

குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


கும்பம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


மீனம்

மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

யாரை அதிகம் நேசிக்கிறோமோ அவரிடம் குறைவாகவே சொல்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 தமிழினத்தின் இருண்ட நாள்






ஒரு குளத்தில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காக அந்த குளத்தையே இல்லாது அழித்தொழித்ததற்கு ஒப்பான ஒரு செயலே முள்ளிவாய்க்காலில் நடந்தேறியது.

2009 மே. 18 தமிழினத்தின் இருண்ட நாள். தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்த நாள்.

நீரின்றி, உணவின்றி, மருத்துவம் ஏதுமின்றி, உடுக்க உடுபுடைவை இன்றி, இருக்க வீடின்றி உயிரைப்பாதுகாக்க பாதுகாப்பு வலயத்துக்குள் ஓடிச் சென்றதும், அதே பாதுகாப்பு வலயமே தமிழினத்தின் மயானமானதும் வார்த்தைகளாலோ எழுத்துக்களாலோ வர்ணிக்க முடியாதவை.



தன் தாய் இறந்தது தெரியாது தாயின் முலையில் பால் குடித்த குழந்தையை எங்கும் கண்டீரோ? எம் ஈழத்தில் அது நடந்தேறியது.

இறந்த தன் தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்த அவகாசம் இல்லாது உடலை கடற்கரையில் விட்டு வந்த கொடுமை கேட்டீரோ?

எம் ஈழத்தில் அது நிகழ்ந்தது.

பசிக்கழுத பிள்ளைகளுக்கு உணவு தேட பதுங்கு குழியை விட்டு வெளியே வந்த தாய் செல்லடிபட்டு சிதைந்து போன கொடுந்துயர் கேட்டிருக்கிறீரோ?

ஈழத்தில் எம் கண் முன்னே அது நடந்தது.

சொத்து, சுகம் எதை இழந்தாலும் பரவாயில்லை, உயிரை இழக்காதிருக்க தமிழினம் தன் தன்மானத்தையே இழந்து, இன்று அநாதை இனமாய் துவண்டு கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது என்ற போர்வையில் பாரிய இன அழிப்பே அரங்கேறிய பின்னர் பயங்கரவாதம் கூண்டோடு அழிக்கப்பட்டது என அரசாங்கத்தினால் சொல்லப்பட்டு அதற்கு வெற்றி விழாக் கொண்டாடப்பட்டாலும்,

இன்றுவரை பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு பரிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை.

மாறாக இரத்த உறவுகளை நினைவுகூர முடியாதபடி பல தடைக்கற்களை தொடர்ந்து இட்ட வண்ணமே உள்ளனர் ஆட்சியாளர்கள்.

இறந்த உயிர்களை நினைவுகூர்ந்து அவர்கள் ஆத்மசாந்திக்கு ஒரு தீபமேனும் ஏற்ற அனுமதி தராத ஆட்சியாளர்கள் தமிழினத்திற்கு சுதந்திரத்தைத் தந்துவிடவா போகின்றார்கள்?



தீராத வலிபட்டு கொத்துக் கொத்தாய் இறந்து போன தமிழினத்திற்கு நீதி வேண்டும்.

அந்த நீதி உண்மையானதாகவும் நேர்மையானதுமாய் இருக்க வேண்டும்.

அதை சர்வதேச சமூகம் பெற்றுத்தர வேண்டும்.

இப்போது இதுவே தமிழினத்தின் மனக்கிடக்கை.

யார் அடித்தனரோ அவர்களே விசாரணை செய்யின், அந்த் விசாரணை எவ்வாறு நீதியாய் அமையும்?

மாண்டுபோன பல்லாயிரக் கணக்கான உறவுகளின் ஆத்மா சாந்தி பெற நாம் வீடுகளில் தீபமேற்றி அவர்தம் ஆத்ம ஈடேற்றத்திற்காய் பிரார்த்திப்போமாக.

**அபிமன்யு**



தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன். கஜிந்தன்)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அஞ்சலி செலுத்தினர்.

(படம்:-சிவசாந்தன்)



முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அருகில் இடம்பெற்றது.

(படம்:-ரவிசாந்)

## வன்னிக்கு புதிய பிரதி பொலிஸ்மா அதிபர்

(நெளுக்குளம்)

வன்னிப்பிராந்திய புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக கேகாலை மாவட்டத்தில் கடமையாற்றிய தே.சந்தன அழகக்கோன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதேவேளை முன்னாள் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசிறி கொழும்பு விசேட பிரிவு மற்றும் சிறுவர், பெண்கள் பிரிவிற்கு பிரதி பொலிஸ்மா அதிபராக இலங்கை பொலிஸ்மா அதிபரினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.(4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய நெருக்கடியில்
## பிரதமர் பதவிக்கு ரணில் பொருத்தமானவர்
### பெங்கமுவே நாலக தேரர்

(கொழும்பு)
நாடு தற்போது எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் நாட்டை கட்டி யெழுப்பக் கூடியவராக பாரா ளுமன்றத்தில் இருக்கும் ஒரே நபர் ரணில் விக்கிரமசிங்க மாத் திரமே எனவும் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் இறுதியில் ஊடகங்களிடம் கருத்து வெளி யிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பெங்கமுவே நாலக தேரர் சிங்கள தேசியவாத அடிப்படை வாத கொள்கைகளை கொண் டுள்ள பௌத்த பிக்கு. அவர் கடந்த காலங்களில் சிறுபா ன்மை மக்களுக்கு எதிராக கடும் நிலைப்பாடுகளை கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்.

அத்துடன் பெங்கமுவே நாலக தேரர், தீவிரமான மகி ந்த ராஜபக்ஷ ஆதரவாளர் என் பதுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அர சாங்கம் பதவி விலகக் கூடாது என வலியுறுத்தி பௌத்த பிக்கு மார் கொழும்பில் அண்மையில் நடத்திய பேரணியிலும் இந்த தேரர் கலந்து கொண்டார்.

மேலும் நாலக தேரர் உட்பட சிங்கள பௌத்த தேசியவாத கொள்கைகளைக் கொண்ட பௌத்த பிக்குகள் ரணில் விக் ரமசிங்கவின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து வந் துள்ளனர் என்பதும் குறிப்பி டத்தக்கது. (நி)

## மாத்தறையில் ஆக்ரோசமான அபூர்வ விலங்கு



(மாத்தறை)
மாத்தறை, மிதிகம பிரதேச த்தில் இனந்தெரியாத மிருகம் ஒன்று நேற்றைய தினம் கண் டுபிடிக்கப்பட்டதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, நேற்று முன் தினம் மிதிகம ஜெயவிஜய கிராமத்தில் உள்ள வீடொன் றில் மறைந்திருந்த அந்த விலங்கு கண்டுபிடிக்கப்பட்டது. அது ஆக்ரோஷமாக செயற்பட ஆரம் பித்தமையினால் கிராம மக்கள் அதனை கயிற்றினால் கட்டி வைத்துள்ளனர். நான்கு கால் கள் மற்றும் நீண்ட வால் கொண்ட இந்த உயிரினத்தை இதுவரை பார்த்ததில்லை என கிராம மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாத்தறை மிரிஸ்ஸ வனவிலங்கு அலுவ லகத்திற்கு அறிவிக்கப்பட்டுள் ளது என மக்கள் தெரிவித்த னர். (நி)

## பிரிவினைக்கான நேரம் இதுவல்ல
## புதிய சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ



(கொழும்பு)
இது பிரிவினைக்கான நேரம் அல்ல, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டிய நேரம் இது என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

225 பேரைக் கொண்ட பாராளுமன்றம் பிரிக்கப்பட்டால் மக்களின் கடமைகளை நிறைவேற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகராக பதவியேற்றதன் பின்னர் சபையில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

## வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட
## 71 எம்.பிக்களுக்கு புதிய வீடுகள்

(கொழும்பு)
அண்மையில் நாட்டில் பல பகுதி களில் ஏற்பட்ட வன்முறை சம்பவங் களின் போது 71 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளை விக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர்களுக்கு விரைவாக புதிய வீடொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

தலவத்துகொட பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் பாராளு மன்ற உறுப்பினர்களுக்காக 100 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின் றன.

அவற்றை விரைவில் நிறைவு செய்து பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (நி)

## ஐ.ம.ச வில் இருந்து விலகிய
## ஹரின், மனுஷ பிரதமருக்கு அவசர கடிதம்

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

நெருக்கடியான நிலையில் நாட்டை பொறுப்பேற்று பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்கு முன் னிலையானமைக்காக ஆதரவு வழங்கவுள்ளதாக அவர்கள் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, ஸ்தாபிக்கப்பட வுள்ள அனைத்துக் கட்சி அர சாங்கத்திற்கு ஆதரவு வழ ங்க தாம் ஐக் கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி சுயாதீன மாகச் செயற்பட நடவடிக்கை எடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர்க ளான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அந்த கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அனைத்துக் கட்சி அரசாங்கத் திற்கு ஆதரவு வழங்கப்படும் பட்ச த்தில் அமைச்சின் பொறுப்புக்களை உரிய வகையில் நிறைவேற்ற வுள்ளதுடன், அமைச்சர்களுக்கு கிடைக்கப்பெறும் வரப்பிரசாதங்கள் எவையையும் ஏற்கப்போவதில்லை எனவும் அவற்றை நாட்டை கட்டி யெழுப்புவதற்காக ஒதுக்குவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா:26 ½ சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/ தொழில்:BCs பட்டதாரி நில அளவையாளர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12674 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Buchel.Optome/ Aust, Optometrist, West field தனியார்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர்.பொறியியலாளர். கணக்காளர்.அவுஸ்திரேலிய பிரஜை விரும்பத்தக்கது உள்நாடும் ஏற்கப்படும்<br>தொ.இ:G/9090 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் : பூரம் 4<br>கி.பா:சூரி 5 செவ் 10 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BIT,SLIT Store Keeper<br>எதிர்பார்ப்பு :வெளிநாடும் தொழிலுள்ள பெண்ணும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12675 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 54 சூரி 7 செவ் 2 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L இலங்கை மின்சாரசபை<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் வங்கி அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/9644 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா:58 ¾ சூரி 11செவ் 10 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: லண்டனில் வசிக்கும் பெண் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12676 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 61 சூரி .செவ் 7 இல்<br>உயரம் : 5'5"<br>தகைமை/ தொழில்: O/L தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/9705 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்:5'6'<br>தகைமை/தொழில்:BSc Area Manager ( Private Company),<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும் ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12678 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம் 3<br>கி.பா:சூரி 12 செவ் 3 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு வெளிநாடு<br>தொ.இ:G/9729 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## உணவகம் வாடகைக்கு வழங்குதல்

A9 வீதியில் முறிகண்டியில் அமைக் கப்பட்டுள்ள அகில இலங்கை இந்து மாமன்ற வன்னிப் பிராந்திய நிலையக் கட்டடத்தில் சைவ உணவகம் நடாத்து வதற்கு தகுதியானவர்கள் விண்ணப் பிக்கவும்.


உபதலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்,
21/17 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(1409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 48

# மன அமைதியே வெற்றி



அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் ஒரு சிறிய பண்ணை வீட்டில் இருந்த அவர், பல ஆண்டுகளாகத் தன் கையில் ஒரு கடிகாரம் கட்டியிருந்தார்.

அவரைப் பொறுத்த வரை அது வெறும் கைக்கடிகாரம் அல்ல... சென்டிமென்ட். பல நல்ல தருணங்கள், வெற்றிகள் அவருக்கு நிகழ்ந்ததற்கு அந்தக் கடிகாரம் தான் காரணம் என்கிற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஒருநாள் பண்ணை வேலையெல்லாம் முடிந்து வெளியே வந்த பிறகுதான் கவனித்தார். அவர் கையில் கட்டியிருந்த கடிகாரத்தை காணவில்லை.

உடனே பரபரப்பாகி, தன் விவசாயக் கிடங்குக்குள் போய்த் தேட ஆரம்பித்தார். எவ்வளவு நேரம் தேடியும் கடிகாரம் கிடைக்கவில்லை. கவலையோடு வெளியே வந்தார்.

அவருடைய கிடங்குக்கு வெளியே சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

அவருக்கு உடனே ஒரு யோசனை வந்தது.. "டேய்... பசங்களா!" என்று அழைத்தார். சிறுவர்கள் ஓடி வந்தார்கள். இந்தக் கிடங்குக்குள்ள என் கடிகாரம் காணாமல் போயிடுச்சு. கண்டு பிடிச்சு கொடுப்பர்களுக்கு அருமையான பரிசு ஒண்ணு தருவேன்" என்றார்.

மாணவர்கள் துள்ளிக் குதித்தபடி, அவருடைய வேளாண் கிடங்குக்குள் ஓடினார்கள். அத்தனைபேரும் உள்ளே இருந்த வைக்கோற்போர், புல், பூண்டு, இண்டு, இடுக்கு விடாமல் தேடியும் கிடைக்கவில்லை.

சோர்ந்து போனவர்களாக வெளியே திரும்பி வந்தார்கள். விவசாயியிடம், "மன்னிச்சுக்கங்க ஐயா, எங்களால கண்டுபிடிக்க முடியலை" என்றார்கள்..

அந்த நேரத்தில், தயங்கித் தயங்கி ஒரு சிறுவன் அவரருகே வந்தான்.

ஐயா, எனக்கு மட்டும் இன்னொரு வாய்ப்பு கொடுங்கள்.. நான் அந்த கடிகாரம் கிடைக்கிறதா? என்று முயற்சி செய்து பார்க்குறேன்" என்றான்.

சிறுவன் கிடங்குக்குள் நுழைந்தான். கதவைச் சாத்திக் கொண்டான். அவன் உள்ளே நுழைந்து பதினைந்து நிமிடங்கள் தான் ஆகியிருக்கும். கதவு திறக்கப்பட்டது.

வெளியே வந்தான். அவன் கையில் காணாமல் போயிருந்த அவரின் கடிகாரம் இருந்தது. அவருக்கு ஒரே ஆச்சரியம்..

தம்பி... நீ மட்டும் எப்படி சரியா கடிகாரத்தை கண்டு பிடிச்சே?" என்று கேட்டார்.

ஐயா... நான் உள்ளே போய் ஒண்ணுமே செய்யவில்லை... கிடங்குக்கு நடுவில் கண்ணை மூடி உட்கார்ந்து இருந்தேன்..

ஐஞ்சு நிமிடம் அப்படியே காத்திருந்தேன். அந்த அமைதியில கடிகாரத்தோட டிக்...டிக்... டிக்...' சத்தம் கேட்டுச்சு. சத்தம் வந்த திசைக்குச் சென்றேன், கடிகாரத்தை. கண்டு பிடித்தேன் என்றான்..

ஆம்.,நண்பர்களே...,

மன அமைதி என்கிற இரண்டெழுத்து வசப்பட்டால் போதும்... எதிலும், எங்கும் வெற்றியே!

ஆனால், எல்லோருக்கும் எளிதாக அது வாய்ப்பது இல்லை.

பரபரப்பான மனம் கொண்ட ஒருவரைவிட, மன அமைதியுள்ளவர் சிறப்பாகச் சிந்திப்பார்.

தினமும் கொஞ்ச நேரத்தை, மனதை அமைதிப்படுத்தச் செலவழித்துப் பாருங்கள்...

உங்களால் எவ்வளவு அற்புதமாக, சிறப்பாகச் செயற்பட முடியும் என்பதை நீங்களே அறிவீர்கள்.

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்**

# சுவீடன், ரஷ்யா போ

(மொஸ்கோ)

**நேட்டோ கூட்டணியில் சுவீடன், பின்ல**

**அறிவித்திருக்கும் நிலையில் ரஷ்யா கடும்**

நேட்டோ கூட்டணியில் உக்ரைன் இணைவதை தடுக்கவே, அந்நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது. சுமார் இரண்டரை மாதங்களுக்கும் மேலாக நீடித்து வரும் இப்போரால், உக்ரைனின் பல நகரங்கள் சின்னாபின்னமாகி விட்டன.

ரஷ்யாவின் தாக்குதலில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இலட்சக்கணக்கானோர் அகதிக

# அகதிகள் விவகாரத்தில்

## ஐரோப்பிய நாடுகள் இரட்டைவேடம்

(ஜெனிவா)


ஒரு உயிரை காப்பாற்றுவதற்கு இனமும், தேசமும் தடையாக இருக்கக் கூடாது என ரெட்கிராஸ் சங்க தலைவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு 3 ஆவது மாதத்தை எட்டவுள்ளது. இந்த போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். அவர்களை ஐரோப்பிய நாடுகள் வரவேற்கின்றன.

அதே சமயம் ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் போர் உள்ளிட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அகதிகள் வந்தால் ஐரோப்பிய நாடுகள் உள்ளே அனுமதிக்க மறுக்கின்றன.

இந்நிலையில் அகதிகள் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் இரட்டை வேடம் போடுவதாக சர்வதேச ரெட்கிராஸ் சங்கத்தலைவர்

# கியூபா மீது விதிக்கப்பட்ட தடைகளை நீக்கியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

கியூபா மீது முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதற்கான திட்டங்களை அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட புதிய நடவடிக்கைகளின் கீழ், குடும்பத்துக்கான பணம் அனுப்புதல் மற்றும் கியூபாவிற்கு பய ணம் செய்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

இதுதவிர, மேலும், கியூபா நாட்டவர்களுக்கான அமெரிக்க விசாக்கள் பரிசீலனையும் துரிதப்படுத்தப்படும்.

இந்த நடவடிக்கை, கியூபா குடிமக்கள் அரசாங்க அடக்குமுறையில் இருந்து விடுபட்ட வாழ்க்கையைத் தொடர அனுமதிக்கும் என்று வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சி யில் 2017 ஆம் ஆண்டு கியூபா அரசாங்கத்தின் மீது பல தடைகளை ட்ரம்ப் அறிவித்தார்.

அவரது நிர்வாகம் விசா செயலாக்கத்தை குறைத்தது, பணம் அனுப்புவதை கட்டுப்படுத்தியது மற்றும் குடும்ப வருகைகள் தவிர வேறு எந்தக் காரணத்திற் காகவும் கியூபாவிற்கு செல்ல விரும்பும் அமெரிக்க குடிமக்களுக்கு தடைகளை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...பின்லாந்து மீது ...போர் தொடுக்கக்கூடும்

...ன்லாந்து நாடுகள் இணையவுள்ளதாக ...டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

...ளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்திருக்கின்றனர். எனினும், உக்ரைன் தலைநகர் கீவ்வை ரஷ்ய இராணுவத்தினரால் இது வரை கைப்பற்ற முடியவில்லை.

இதனால் கீவ்வை சுற்றி வளைத்து ரஷ்ய இராணுவம் குண்டு மழை பொழிந்து வருகிறது.

இந்த சூழலில், ரஷ்யாவின் அண்டை நாடுகளான சுவீடனும், பின்லாந்தும் நேட்டோ கூட்டணியில் இணையவுள்ளதாக நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.



இது ரஷ்யாவுக்கு கடுங் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், நேட்டோ கூட்டணியில் இணைந்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அந்த இரு நாடுகளுக்கு ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் ரியாப்கோவ் பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

"எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற பொது அறிவு கூட இல்லாமல், பின்லாந்தும், சுவீடனும் நேட்டோ கூட்டணியில் இணையும் முடிவை எடுத்திருக்கின்றன. மிக ஆபத்தான தவறினை அவை செய்திருக்கின்றன. பதற்றம் அதிகரிக்கவே செய்யும்" என அவர் தெரிவித்தார்.

இதனிடையே, சுவீடன், பின்லாந்தின் இந்த முடிவால் அந்த நாடுகள் மீதும் ரஷ்யா போர் தொடுக்கக் கூடும் என மேற்கத்தேய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. (நி)

---

பிரான்சிஸ்கோ ரோக்கா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், நைஜீரியாவில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஐரோப்பாவுக்கு வருகின்றனர். ஆனால் அவர்களை ஐரோப்பிய அரசுகள் ஏற்க மறுக்கிறது. யார் வன்முறையில் இருந்து தப்பி வந்தாலும், யார் பாதுகாப்பு தேடி வந்தாலும் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும்.

உக்ரைன் விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பது நல்ல விடயம்.

ஆனால் தெற்கு எல்லையில் உள்ள மத்திய தரைக்கடல் நாடுகளுக்கு பக்கத்தில் உள்ள ஒரு அணுகுமுறையையும், கிழக்கு எல்லையில் உள்ள உக்ரைனுக்கு ஒரு அணுகுமுறையையும் ஐரோப்பிய நாடுகள் வைத்துள்ளன.

ஒரு உயிரை காப்பாற்றுவதற்கு இனமும், தேசமும் தடையாக இருக்கக் கூடாது.

அரசாங்கங்கள் சரியான அகதிகள் கொள்கைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## பிரான்ஸ் புதிய பிரதமராக எலிசபெத் போர்னி நியமனம்



(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற இம்மானுவேல் மக்ரோன் இரண்டாவது முறையாக அந்நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளதை அடுத்து பிரான்ஸ் அரசில் மாற்றங்களை கொண்டு வர அவர் முடிவு செய்தார். இதன் அடிப்படையில் பிரான்ஸ் பிரதமர் ஜீன் கெஸ்ட்க்ஸ் நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து முந்தைய அரசில் தொழிலாளர் அமைச்சராக பதவி வகித்து வந்த எலிசபெத் போர்னி பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் வெளியிட்டுள்ளார்.

61 வயதான போர்ன், பிரான்ஸ் வரலாற்றில் அந்நாட்டு பிரதமராக நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். (நி)

## ஈராக்கில் பாரிய மணல் புயல்



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பாரிய மணல் புயல் உருவாகியுள்ளதாகவும் இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினத்தில் தோற்றம் பெற்ற இந்த மணல் புயல் இன்று பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் இதனால் நகரில் பாடசாலைகள் உட்பட அனைத்து தொழில்துறைகளும் செயற்பட முடியாதளவிற்கு முற்றிலும் செயலிழந்துள்ள நிலை காணப்படுகின்றது.

அதே நேரம் மக்கள் சுவாசப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையும் தோன்றியுள்ளது.

மணல் புயல் காரணமாக சுத்தமான ஒட்சிசன் கிடைக்காது மக்கள் அவதியுறுவதாகவும் மருத்துவமனைகளில் மக்கள் ஒட்சிசன் பெற்றுக் கொள்வதற்கு முண்டியடித்துக் கொண்டு இருப்பதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (நி)

## இஸ்ரேல் படையினர்-பாலஸ்தீனர்கள் மோதல் 71 பேர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் படையினர் - பாலஸ்தீன மக்களிடையே ஜெருசலேமில் நேற்று முன்தினம் மோதல் வெடித்தது.



இஸ்ரேல் படைகள் மீது கற்கள் வீசி பாலஸ்தீன மக்கள் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து இஸ்ரேலியப் படைகள் கூட்டத்தின் மீது கண்ணீர்ப் புகை மற்றும் றப்பர் தோட்டாக்களை வீசியதுடன், சரமாரித் தாக்குதல் நடத்தினர். இந்த மோதலில் 71 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலியப் படையினருடன் ஏப்ரல் 22 அன்று ஜெருசலேமின் மிக முக்கியமான அல் அக்ஸா மசூதியில் இடம்பெற்ற மோதலின் போது இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலில் காயமடைந்த வலீத் ஷரீப்பின் என்ற இளைஞன் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். அவரது இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் பங்கேற்றனர்.

இந்த இறுதி ஊர்வலத்தில் பாலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேல் படைகள் மீது கற்கள் உள்ளிட்டவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேல் படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதால் இரு தரப்புக்கும் இடையே பெரும் வன்முறை வெடித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா இருக்கும் வரை குழப்பங்களும் இருக்கும்

## செல்வம் எம்.பி

(நெளுக்குளம்)

புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டாலும் ஜனாதிபதி வீட்டுக்கு செல்லாத வரை தொடர்ந்து இந்த குழப்பம் இருக்கும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

புதிதாக பிரதமர் பதவியேற்றது தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்த விடயத்தில் மக்கள் எதிர்ப்பு இருப்பதற்குக் காரணம் கோட்டா கோ கோம் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இதற்குள்ளே இருந்து கொண்டு தன்னுடைய பரிவாரங்களை தெரிவு செய்திருக்கின்ற ஒரு சூழலை மக்கள் எதிர்க்கிறார்கள்.

அந்த வகையிலே புதிய பிரதமராக தெரிவு செய்து அடுத்த அமைச்சரவை அவர்களுடைய சகாக்களாக இருக்கின்ற சூழல் ஏற்படும். அதனால் மக்கள் எதிர்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

ஜனாதிபதி கூறியது போல 19 ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றிற்கு அதிகாரங்களை கொடுக்கின்ற வகையிலே அதனை செய்து பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை கொடுத்துவிட்டு அவர் வீட்டுக்கு செல்ல வேண்டும். அப்படி செல்கின்ற போது தான் மக்கள் ஜனநாயக முறையான பாராளுமன்றத்திற்கு ஆதரவை தருகின்ற வாய்ப்பு ஏற்படும் என தெரிவித்தார். (4-299)

# நினைவேந்தலின் போது புலிகளின் சின்னங்களை பயன்படுத்த வேண்டாம்

## முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி

(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால், மே-18 நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ.மயூரன் ஆகியோரிடம் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மே-18 நினைவேந்தலின்போது விடுதலைப் புலிகளின் சின்னங்கள் எவையும் பயன்படுத்தக்கூடாது என பொலிஸாரால் இந்த விசாரணையின்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விசாரணைகளின் பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலினை மேற்கொள்வதற்கு பிரதமர் கூட மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும், அதேபோல் தாமும் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு எவ்வித இடயூறுகளையும் மேற்கொள்ளமாட்டோம் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடத்தி முடிக்க வேண்டும் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.அதிலும் குறிப்பாக இந்த நினைவேந்தல் நிகழ்விலே விடுதலைப் புலிகளின் சின்னங்கள் அங்கே பயன்படுத்தப்படாமல் நினைவேந்தல் நிகழ்வை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது என தெரிவித்தார். (4-281)

# இன்று முதல் 24 வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் இன்று 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

இந்த தேசிய நிகழ்வு,அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச , தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்கள் சுற்றுச் சூழலை துப்பரவாக பேணவும்.


இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள மற்றும் பாடசாலைகள் , வீடுகள் , மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)

# பராமரிப்பின்றி காணப்படும் குஞ்சுக்குளம் சுற்றுலா மையம்

(மன்னார்)

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலாமைய கட்டடத்தொகுதி பாழடைந்த நிலையில்,குறித்த கட்டடத் தொகுதியில் உள்ள பொருட்கள் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குறித்த சுற்றுலா மையம், நானாட்டான் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த சுற்றுலா மையம் தற்போது அடர்ந்த காடு போல் காட்சியளிப்பதோடு, குறித்த மைய கட்டடத்தொகுதி சேதமாக்கப்பட்டுள்ளதோடு, பொருட்களும் உடைக்கப்பட்டுள்ளன.

பல இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்டு சுமார் 6 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு மக்கள்பாவனை இன்றி காணப்படுகின்றமை குறித்து உரிய அதிகாரிகள் கவனயீனத்துடன் செயற்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-285)


# ஓராண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 25 . 07 . 1945



மனம்துவழ 28 . 05 . 2021

அமரர்.திருமதி. சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(திதி-அபரபக்க திருதியை 18.05.2022)

உயிருக்குள் அடைகாத்து
உதிரத்தை பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி
பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து
நமக்காகவே வாழ்ந்த அன்புத் தெய்வம்

(சி-4330)

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

உங்கள் நினைவுகளுடன் ... 074 215 5046


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 200 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 280 | 250 |
| தக்காளி | 800 | 600 | 550 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 120 | 120 |
| கோவா | 230 | 200 | 240 | 300 |
| கரட் | 300 | 340 | 320 | 350 |
| பூசணி | 120 | 80 | 100 | 120 |
| புடோல் | 260 | 250 | 200 | 280 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 170 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 550 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 120 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 350 | 200 | 300 | 360 |
| கறிமிளகாய் | 400 | 300 | 240 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1000 |
| போஞ்சி | 400 | 600 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 320 | 180 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 70 | 150 |
| தேசிக்காய் | 800 | 500 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 450 | -- | -- | 320 |
| முள்ளங்கி | 80 | 150 | 120 | 280 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022



மனதில் பட்டதை மறைக்காமல் பேசும் மிதுன இராசி வாசகர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் லாப ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே தொழில் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். அஷ்டமத்துச் சனி ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

### மீன - செவ்வாய் சஞ்சாரம்

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6 இற்கு அதிபதியான செவ்வாய், 10 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் பிரச்சினை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். நிம்மதி குறையும். வாய்தாக்கள், வழக்குகள் வந்த வண்ணம் இருக்கும். மனக் குழப்பம் ஏற்படலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் தொல்லை அதிகரிக்கும். சுய தொழில் செய்வது பற்றி சிந்திப்பீர்கள்.

### சனி - செவ்வாய் பார்வைக் காலம்

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமத்துச் சனி ஆதிக்கம் மற்றும் சனி -செவ்வாய் பார்வை ஏற்படுவதால் விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. தொழில் பங்குதாரர்களால் தொல்லை ஏற்படலாம். குருவோடு செவ்வாய் இணைந்து 'குரு மங்கள யோக'த்தை உருவாக்குவதால் இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடும்.

### புதன் வக்கிர நிவர்த்தியும் ரிஷப சஞ்சாரமும்

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். மருத்துவச் செலவு குறையும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. தனவரவு திருப்தி தரும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். இந்த நேரத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் தேடி வரும்.




### மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். விரயாதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்திற்கு வரும்போது, விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும். இருப்பினும் வீண் விரயம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை சுமுகமாகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

### மகரச் சனியின் வக்கிர காலம்

உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான், வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகிறார். இந்த காலகட்டத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். வருமானம் இருந்தாலும் செலவு இரட்டிப்பாகும். பெற்றோர் வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பூர்வீக சொத்து சம்பந்தமாக எடுத்த முயற்சி தடைப்படும். எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய நேரம் இது. இம் மாதம் புதன் கிழமை தோறும் விரதமிருந்து விஷ்ணு மற்றும் லட்சுமியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கமும், 10 ஆம் இடத்து குருவின் ஆதிக்கமும் உள்ளதால் பதவி மாற்றம் வரலாம். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். நீண்ட நாள் நோய் அகன்றாலும், உடல் நலனில் சில கோளாறுகள் வரத்தான் செய்யும். பொருளாதாரப் பற்றாக்குறை உண்டு. பணி புரியும் பெண்களுக்கு இடமாற்றம், ஊர்மாற்றம் உண்டாகலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி செலவிடுவீர்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகமும், ஒரு சிலருக்கு வாய்க்கும்.

## விரயத்திற்கு ஏற்ற வருமானம் வந்து சேரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மற்றவர்களின் தயவை எதிர்பார்க்காமல் வெற்றி பெறும் கடக இராசி வாசகர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் செவ்வாயும், சப்தமத்தில் சனியும் இருப்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் காரியங்கள் எப்படியாவது கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

### மீன - செவ்வாய் சஞ்சாரம்

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர், பாக்கிய ஸ்தானத்திற்கு வருவதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடன் சுமை குறையும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். பொருளாதார சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள்.

### சனி - செவ்வாய் பார்வைக் காலம்

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பிரச்சினை, சொத்து பிரச்சினை அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். விரயத்தால் மன நிம்மதி குறையும். வாங்கிய சொத்துக்களை விற்கக்கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். ஆரோக்கியம் பாதிக்கும்.

### புதன் வக்கிர நிவர்த்தியும் ரிஷப சஞ்சாரமும்

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், வக்கிர நிவர்த்தியாவதால் விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர். வழக்குகள் சாதகமாக அமையும். வைகாசி 23 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். எனவே வருமானம் திருப்தி தரும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

### மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிகள் விலகுவர். சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். 'புதிய கிளைத் தொழில் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.




### மகரச் சனியின் வக்கிர காலம்

உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான், வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகிறார். இந்த காலகட்டத்தில் உங்களுக்கு ஓரளவு நன்மைகள் கிடைக்கும். இருப்பினும் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். கூட்டுத் தொழில் புரிவோர், கணக்கு வழக்குகளில் கவனமாக இருங்கள். உத்தியோகத்தில் வீண்பழி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

வாகனப் பழுது வாட்டம் தரும். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கண்டகச் சனியும், அஷ்டமத்துச் செவ்வாயும் இருப்பதால் மனக்கசப்பு தரும் சம்பவங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. குரு பார்வை இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். மனக் குழப்பம் மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் கொடுப்பதால் பிரச்சினைகள் வரலாம்.

## உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## உழவுக்கு வந்தனை செய்



(நேற்றைய தொடர்ச்சி)

பரமசிவமும் "இன்னொரு தடவை நன்றாகத் தேடிப்பார். உன்னிடம் தான் கொடுத்தேன். நன்றாக நினைவில் இருக்கிறது. அதில் ஒரு புதையல் பற்றிய ரகசியமும் இருக்கிறது" என்றான். அதைக் கண்ணனின் மனைவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அதனால் பரமசிவம் போனதும் அவள் "அதில் புதையல் பற்றிய ரகசியம் இருக்கிறதமே. அப்படியானால் அதைத் தேடி எடுத்து அந்த ரகசியத்தைப் படித்துத் தெரிந்து கொண்டு விட்டுப் புத்தகத்தைக் கொடுக்கலாம்" என்று கூறி என் கண்ணனோடு சேர்ந்து அவளும் தேடிப்பார்த்தாள். ஆனால் கிடைக்கவில்லை. மறுநாள் வந்த பரமசிவம் இனி அவர்களை நம்பிப் பயனில்லை என்று கண்டு அவர்கள் வீட்டு வேலைக் காரியைத் தனியே அழைத்துப் போய் ஏதோ ரகசியமாகச் சொல்லி விட்டுப் போனான். அதன்படி கண்ணணன் வீட்டில் இல்லாத போது அவன் மனைவியிடம் அந்த வேலைக்காரி "அம்மா! நீங்கள் ஏதோ புத்தகத்தைத் தேடுகிறீர்களே. அதை நம்ம ஐயா புளியந்தோப்பில் உள்ள முத்தம்மாவிடம் கொடுத்து வைத்திருக்கிறார். அதை அவளிடமிருந்து வாங்கிப் பரமசிவத்திடம் கொடுங்கள். புதையலில் பாதி கிடைக்கும்" என்றாள்.

முத்தம்மா மந்திரக்காரி. தாயத்துக்கட்டுபவள். வேப்பிலைக் குழை அடிப்பவள் கண்ணன் வந்ததும் அவன் மனைவி "புத்தகத்தை முத்தம்மாவிடம் கொடுத்து வைத்திருக்கிறீர்களாமே.


எனக்குத் தெரியாமல் இப்படி ஒரு வேலையா?" என்று கேட்டாள். கண்ணனோ தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லியும் அவன் மனைவி சமாதானப் படவில்லை. அதனால் கண்ணன் பரமசிவத்தின் வீட்டிற்குப் போய் "உன் புத்தகப் பிரச்சினை என் குடும்பப் பிரச்சினையாகி விட்டது. நீயே இதைத் தீர்த்து வை" என்று வேண்டினான்.

அப்போது பரமசிவம் கோபத்தோடு "எனக்கு என் புத்தகம் தேவை. உன் பிரச்சினை பற்றி எனக்கு என்ன கவலை? நீ மட்டும் இன்று மாலைக்குள் என் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுக்காவிட்டால் பயில்வான் மலையப்பனை அனுப்பப் போகிறேன். அவன் வந்தால் உன்னை என்னபாடு படுத்துவான் என்று நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமா? அதனால் மரியாதையாக புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்து விடு என்று மிரட்டினான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




சுக்கீரிவன் தென் திசை நோக்கிச் செல்லும் வீரர்களுக்குச் செல்ல வேண்டிய வழி வகைகளைக் கூறினான்; "முதலில் விந்திய மலையை அடைதல் வேண்டும்; அதனைக் கடந்து சென்றால் நருமதை ஆறு வரும்; அதனைக் கடந்தால், ஏமகூடம் என்னும் மலை வரும்; அதனைக் கடந்து சென்றால், பெண்ணை ஆற்றங்கரை வரும்; விதர்ப்ப நாட்டைக் கடந்தால், தண்ட காரணியம் வந்து சேரும்; அங்கே முண்டகத் துறை என்ற ஒன்று உள்ளது.

அதனைக் கடந்து சென்றால், பாண்டு மலை என்ற மலை ஒன்று உள்ளது; அங்கே கோதாவரி என்னும் நதி உள்ளது. அதனைக் கடந்து சுவணம் என்னும் ஆற்றைத் தாண்டிய பிறகு கொங்கண நாட்டையும் குலிந்த நாட்டையும் காணலாம்; அதன் பின் அருந்ததி மலையை அடையலாம்; ஆற்றை எல்லாம் கடந்து சென்றால் தமிழ் நாட்டின் வட எல்லையாகிய திருவேங்கட மலையை அடையலாம். தமிழ் நாட்டில் காவிரியாற்றினைக் கடந்தால், மலை நாடும் பாண்டிய நாடும் வரும்; அவற்றை எல்லாம் கடந்தால் 'மயேந்திரம்' என்னும் மலை தென்கருங் கடலை அடுத்து வரும்; அங்கிருந்து இலங்கைக்குச் சென்று விடலாம்" என்று வழி கூறினான். இராமன், சீதையின் அங்க அடையாளங்களைத் தக்க உவமைகள் கொண்டு அனுமனுக்கு விளக்கினான்; பாதாதி கேசம்வரை அவள் அழகினைப் விபரித்துக் கூறத் தொடங்கினான்.

"அவள் காலடிகள் தாமரையை ஒக்கும் என்றால், புறவழகு ஆமை போன்றது; கணைக்கால்களுக்கு வரால் மீனும், அம்பறாத் துணியும், சூல்கொண்ட நெற் பயிரும் உவமையாகும்; தொடைகள் வாழைகளைப் போன்றன; சீதையின் இடை வெளிப்படாதது; அதற்கு உவமை கூற இயலாது, வயிற்றுக்கு உவமை ஆலிலை; உந்திச்சுழி கங்கையாற்றின் நீர்ச்சுழி போன்றது; கைகள் காந்தள் மலர் போன்றன; தோளுக்கு மூங்கிலையும் கரும்பையும் கழுத்துக்குப் பாக்கு மரத்தினையும் உவமை கூறலாம்; சங்கும் உவமையாக லாம்; பச்சோந்தி, எள் பூ, குமிழ மலர் அவள் மூக்குக்குச் சரியான உவமைகள் ஆகும்.

செவிக்கு வள்ளைக் கொடி கண்களுக்குக் கடல்; புருவங்களுக்கு வாள்; நெற்றிற்குப் பிறைச் சந்திரன், ஓரளவு முகத்துக்குத் தாமரை, கூந்தலுக்கு மேகம்; நிறத்துக்குப் பொன் உவமைகளாகும்.

இவ்வாறு அவள் அழகைப் புனைந்துரைத்து, எல்லா வகையிலும் அழகிற் சிறந்த நங்கை ஒருத்தி தென்பட்டால் அவளைச் சீதை என்று தீர்மானிக்கலாம் என்று தெரிவித்தான். மேலும் அடையாளத்துக்காக இந்தச் செய்திகளையும் சொல்லி அனுப்பினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டான்.
– முகமது நபிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மீளாத் துயில் கொள்ளும் எம் இனிய உறவுகளே! ஒரு கணம் விழித்தெழுந்து பாருங்கள்

தாயக மண்ணில் தலைவைத்து மீளாத் துயில் கொள்ளும் எம் இனிய உறவுகளே!

13 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இன்று போல் இருக்கிறது உங்கள் இழப்பு.

தமிழ் இனத்துக்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்த உத்தமர்கள் நீங்கள்.

உங்களால் காப்பாற்றப்பட்டவர்கள் நாங்கள். ஆம் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் உங்கள் குருதி தாயக மண்ணை சிவக்கச் செய்தது.

அந்தோ! உங்கள் குருதி பாய்ந்தோடுவது கண்டு கதிரவனும் அழுது சிவந்தான்.

அவன் அழுத கண்ணீர் கடலாகிப் பெருக, மே–18 மாலைப் பொழுது அழுது அழுது அங்கமெல்லாம் செந்நிறத்தவனாய் வெம்பிய கதிரவன் உங்கள் இழப்பின் துயர் தாங்காமல் மேற்றிசைக் கடலில் மூழ்கினான்.

அந்த நாள் உங்களை ஆராதிக்கின்ற நாளாயிற்று.

எம் இனிய உறவுகளே! முள்ளிவாய்க்கால் மண்ணில் உங்கள் நினைவோடு உங்கள் உறவுகள்.

அவர்களின் அழுகுரலும் உங்கள் நினைவிடத்தில் விழுகின்ற கண்ணீரும் நிச்சயம் உங்களைத் துயில் எழுப்பும்.

துயில் எழுந்து உறவுகளின் முகம்பார்த்து இதுபோதும் என்று மீளவும் துயில் கொள்கின்ற நேரத்தில்,

அதோ! உங்கள் வாழ்வை நிர்மூலமாக்கியவர்கள், உங்கள் மீது இம்மியும் இரக்கம் காட்டாதவர்கள், அப்பாவிப் பொதுமக்கள் என்றறிந்தும் குண்டுபோட்டுக் கொல்லச் சொன்ன கயவர்கள், இன்று படுகின்ற பாட்டை ஒரு கணம் பார்த்துவிட்டு உறங்குங்கள்.

ஆம், வெளியில் தலைகாட்ட முடியாதவராக மகிந்த ராஜபக்ஷ மறைந்து வாழ்கிறார்.

கொல் என்றும் கொலை என்றும் கொட்டி முழங்கிய பேரினவாதிகள் எரிந்த தங்கள் வீட்டில் ஏதேனும் எடுக்கலாமா? என்று சாம்பல் மேட்டைக் கிண்டிப் பார்க்கின்றனர்.

நான் சிங்களத் தலைவன் பௌத்தத்தின் காவலன். தமிழர்களுக்கு ஏது நாடு? தமிழில் ஏன் தேசிய கீதம்? என்று மார்தட்டியவர் இன்று வாலைச் சுருட்டிக்கொண்டு ஏங்கிக் கிடக்கிறார்.

ஓ! எம் இனிய உறவுகளே! உங்களுக்குப் பாதகம் செய்த படு பாதகர்கள் இனி ஆளவும் முடியாது. ஆட்சி செய்யவும் முடியாது. சேர்த்ததை உண்ணவும் முடியாது. நிம்மதியாக உறங்கவும் முடியாது என்பதாக மகாவம்சத்தின் பின்னிணைப்பில் எழுதப்படலாயிற்று.

நீங்கள் அழுத கண்ணீர் இந்த நாட்டின் செல்வத்தை தேய்த்த படையாய் எழுந்து நிற்கிறது.

உங்கள் இறுதி மூச்சின் அனல் காற்று தென்னிலங்கையை எரித்து நிற்கிறது.

ஆகையால் ஒரு கணம் அதனையும் பார்த்துவிட்டு உறங்குங்கள். உறவுகளே! உங்கள் ஆத்மாக்கள் புனிதமானவை.

புனிதமான உங்கள் ஆத்மாக்கள் கத்தியின்றி இரத்தமின்றி எங்களின் உரிமையை நிச்சயம் பெற்றுத் தரும். இது சத்தியம்.

## பாராளுமன்ற வளாகத்தில் இரு ஊடகவியலாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் பறிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வின்போது இரு ஊடகவியலாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் வந்தபோது ஊடகவியலாளர்கள் இருவரும் தமது கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான டி.வீரசிங்க மற்றும் இந்திக அனுருத்த ஆகியோரால் தமது கைத்தொலைபேசிகள் பறிக்கப்பட்டுள்ளதாக இரண்டு ஊடகவியலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமனவும் அவர்களை திட்டியதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

இரண்டு ஊடகவியலாளர்களும் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியதாகவும் அவர்களுக்கு இதுவரை தொலைபேசிகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## நாடளாவிய ரீதியில் இன்றும் மின்வெட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்றும் சுழற்சி முறையில் 3 மணிநேரமும் 40 நிமிடங்களுக்கும் மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆண்ணக்குழு அனுமதியளித்துள்ளது.

அதற்கமைய A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு மணி நேரமும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுலாகவுள்ளது.

மேலும் கொழும்பு முன்னுரிமை வலயங்களில் (CC) காலை 6 மணி முதல் 9 மணி வரையான காலப்பகுதியினுள் 3 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம்

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி மரணம் மேலும் இருவர் கைது

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மரணம் தொடர்பில் மேலும் இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவு அதிகாரிகளால் நேற்று பிற்பகல் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நிட்டம்புவ மற்றும் பொல்கஹவெல பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடையவர்களாவர்.

சம்பவத்தின்போது சந்தேகநபர்கள் அணிந்திருந்த இரண்டு ஆடைகள் மற்றும் கத்தி ஒன்றையும் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். (ம)

## இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு யுவதி துஷ்பிரயோகம் மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு யுவதி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 40, 28 மற்றும் 23 வயதுடைய உணவக உரிமையாளர் மற்றும் அதன் ஊழியர்கள் இருவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மியன்மார் யுவதி இலங்கை வந்துள்ளார்.


அவர் தங்குவதற்காக பெந்தோட்டாவில் உள்ள ஹோட்டலுக்கு சென்றுள்ளார். தனது தோழி ஒருவருடன் பெந்தோட்டையில் உள்ள உணவகம் ஒன்றிற்குச் சென்று உணவு வாங்கி வந்த நிலையில் அதில் போதைப்பொருள் கலந்து கொடுக்கப்பட்டதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் அவரது தோழி மீண்டும் ஹோட்டலுக்குச் சென்று சுயநினைவுக்கு வந்த நிலையில் தனது தோழி அங்கு இல்லாததை அறிந்து அவர் தங்கியிருந்த ஹோட்டல் நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளனர். அப்போது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டுப் பெண்ணும் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார்.

அதனடிப்படையில் 26 வயதுடைய வெளிநாட்டு யுவதியிடம் வாக்குமூலம் பெற்று பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 3 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

கோயிலில் தீபாராதனை நிறைவுற்றது. சிறிதுநேரம் தேடிய பிறகு ம- நரேந்திரரை முற்றத்தின் மேற்குப் பகுதியில் சந்தித்தார். இருவரும் பேச ஆரம்பித்தனர். தான் கல்லூரி மாணவன், சாதாரண பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவன் போன்ற விஷயங்களை எல்லாம் நரேந்திரர் கூறினார்.

இரவாகிவிட்டது. ம- வீடு திரும்ப வேண்டும், ஆனால் இதுவரை அவரால் போகமுடியவில்லை. ஆகவே நரேந்திரரை விட்டுவிட்டு குருதேவரை தேட ஆரம்பித்தார். குருதேவரின் பாடல்களைக் கேட்டு உள்ளம் பூரித்த ம- நேரன் அவரது பாடல்களைக் கேட்க விரும்பினார்.

பல இடங்களில் தேடிய பின், இறுதியாக காளி கோயிலின் முன் மண்டபத்தில் அவர் நடந்து கொண்டிருப்பதைக் கண்டார். கோயிலினுள் காளியின் இரண்டு பக்கங்களிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்தப் பெரிய மண்டபத்திலும் மங்கிய ஒளியுடன் ஒற்றை விளக்கொன்று மினுமினுத்துக் கொண்டிருந்தது. இருளும் ஒளியும் கலந்ததோர் அற்புதக் காட்சியில் மண்டபம் மிளிர்ந்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 20.05.1944

இறப்பு : 18.05.2020

அமரர்

# கந்தையா சிவபாதம்

( இளைப்பாறிய பிரதி அதிபர் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி )

திதி : 26.05.2022

யாழ். வரணி கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் யாழ். சிவலிங்கப்புளியடி, ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த கந்தையா சிவபாதம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி.

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே!
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
அழியாது என்றும் உம் நினைவுகள்.
புன்னகை கலந்த வதனமுடைய
உங்கள் திருமுகத்தை ஒருதரம் காட்டிடையா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(1416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

வாய்க்கிழமை காலை அவரது வீட்டில் இருந்து தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வரணி நாவற்காட்டு பகுதியைச் சேர்ந்த 65 வயதான வ.துரைராசா என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதியவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## யாழ். மீனவர்...

டுள்ளார்.

கொழும்புத்துறை உதயபுரம் பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது-53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மகனுடன் தொழிலுக்கு சென்றவேளை கடலில் தவறி விழுந்து காணாமல்போயிருந்தார். அவரை மீனவர்கள் தேடிவந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ம-33,104)

## அமரகீர்த்தி...

வெற்றிடத்திற்கு பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, பொலன்னறுவை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் விருப்புரிமை பட்டியலில் 5ஆம் இடத்தில் இருந்த ஜகத் சமரவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான வர்த்தமானி அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. (ம)

மெகா பவர்
திகதி 17/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1106
வெற்றி எழுத்து Q சுப்பர் இலக்கம் 19 வெற்றி இலக்கங்கள் 01 08 14 49

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 067
கன்னி 02 29 34 48 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2022/05/17
சீட்டிழுப்பு இலக்கம் 4758
U 6 8 7 9 6 1

தன நிதானய
திகதி 2022.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 788
A 06 44 51 80

## பிரதி...

னர் ரோஹினி குமாரி விஜேரத்ன கவிரத்ன 78 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அதற்கமைய 31 மேலதிக வாக்குகளால் அஜித் எம்.பி வெற்றி பெற்று பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு இரண்டு பெயர்கள் பாராளுமன்றில் நேற்று முற்பகல் முன்மொழியப்பட்டு, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

பிரதி சபாநாயகர் பதவிக்கு ரோஹினி கவிரத்னவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்ததோடு, ஜி.எல்.பீரிஸ் எம்.பி அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிந்திருந்தார். (ம)

## குண்டர்கள்...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் உப தலைவர் அனுர மத்தகொட ஆகியோர் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகள் குழுவுடனான சந்திப்பின்போது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். (ம)

## தேவையான...

ணங்களின் தலைவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை காரணமாக அரசாங்க செலவினங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அரச ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைப்பதனை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ்.ருவன் சந்திர இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் வரவழைத்து நிறுவன தலைவர்களின் விருப்பத்திற்கேற்ப செயற்பட அனுமதிக்குமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மின்சாரம், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். (ம)

## இன்றுமுதல்...

கப்பல்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய 2,800 மெற்றிக் தொன் எரிவாயு தரையிறக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இன்று முதல் நாளாந்தம் 80,000 சமையல்எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (ம)

## தேவையின்றி...

றோலிய கூட்டுத்தாபனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்படவுள்ளமை காரணமாகவே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வழமையான பெற்றோல் விநியோகம் நாளை வியாழக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முள்ளிவாய்க்...

இன்றுவரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் 13 ஆம் ஆண்டிற்கான நினைவேந்தல் இன்று முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும் என்றும் அனைவரும் வேற்றுமைகளைத் துறந்து சுயவிளம்பரப்படுத்தல்களைக் கடந்து ஒரு பொது நிகழ்ச்சி நிரலில் தமிழர்கள் என்ற ரீதியில் இந்த நினைவேந்தலில் ஒன்றிணையவேண்டும் என்றும் நினைவேந்தலை ஏற்பாடு செய்திருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்டமைப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசாங்கம் கடந்த 2009 ஆம் ஆண்டு இதே தினங்களில் ஈழத்தமிழர்களை மிகமோசமான முறையில் அழித்து, இனவழிப்பை மேற்கொண்டது.

இன விடுதலைக்காகப் போரிட்ட தமிழினத்தை இலங்கையின் அரச பயங்கரவாதம் சர்வதேச சமூகத்தினால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையும், போர்முறைமைகளையும் பயன்படுத்திக் கொன்றொழித்ததை உலகின் வல்லாதிக்க நாடுகள் வெறுமனே வேடிக்கை பார்த்ததுடன், மறைமுகமான ஆதரவையும் வழங்கின.

பாதுகாப்பு வலயங்கள் என்று அரசாங்கத்தினால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தஞ்சமடைந்த அப்பாவி மக்களையும் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட மக்களையும் இராணுவம் குண்டுகளை வீசிக் கொன்றொழித்தது.

அப்போது ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் இலங்கையில் தமது பிரசன்னத்தை நிறுத்திக் கொண்டன.

போதிய உணவுப்பொருட்களையும் காயமடைந்தவர்களுக்கான மருந்துப்பொருட்களையும் அனுப்பிவைக்காமல் இலங்கை அரசாங்கத்தினால் மிகக்கொடூரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பை சர்வதேசம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

இவ்வாறான தொரு பின்னணியில் இன்றுவரை நீதி வழங்கப்படாத இனப்படுகொலையின் 13 ஆம் ஆண்டிற்கான நினைவேந்தல் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறும்.

எனவே அனைவரும் வேற்றுமைகளைத்துறந்து, சுயவிளம்பரப்படுத்தல்களைக் கடந்து எமது பொது நிகழ்ச்சி நிரலில் தமிழர்கள் என்ற ரீதியில் இந்த நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று மாலை 6.00 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன், இயலுமான வரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பினை நினைவு கூருவோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## பெரமுனவின்...

னாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மற்றும் அலரி மாளிகைக்கு எதிரில் போராட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளுக்கு அமைவாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## சுமந்திரனால்...

எம்.பிகளும் இந்த யோசனைக்கு எதிராக வாக்களித்தனர். (ம)

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1561
சீட்டிழுப்பு திகதி: 2022.05.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,328,220/-
12 17 24 33 I

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2022.05.10
சீட்டிழுப்பு இல 3896
ரூ. 3,606,820/-
07 60 62 72 F

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 169
சீட்டிழுப்பு திகதி 2022.05.10
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 19 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,141,880/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,397,962/-
திகதி 2022-05-10
வெற்றி வாரம் 3447
வர்ணம் சிவப்பு
17 22 36 39 மகரம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,811,060/-

சீட்டிழுப்பு வாரம் 911
2022.05.10 செவ்வாய்க்கிழமை
T 31 15 18 52 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 236,586,529/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1735
சீட்டிழுப்பு திகதி 2022.05.10
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
U 05 15 25 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,590,640/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்தாம் யாத்திரை
## பத்திரி, கேதார் யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 20.06.2022

செல்லுமிடங்கள் :
பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவர், ரிஷிகேஸ், சென்னை

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க

S.ராஜன் கையேசி : 077 736 2154

(C-4331)



## பசும் பால் PACKETS
## விநியோகஸ்தர்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் நுண்ணுயிர் நீக்கப்பட்டு பொதி செய்யப்பட்ட தூய பசும்பால் விற்பனை செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் முகவரியில் அலுவலக நேரம் 9.00 AM - 5 PM வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

cemet quality pvt ltd
(சோதி பல்பொருள் வாணிப கட்டடத்திற்கு கீழ்)
Via Palaly road, Kondavil Junction
Station road, Kondavil. T.P : 021 224 2877

(11411)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4313)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777


# தாக்குதல் செய்தியை குறைத்து மதிப்பிட வேண்டாம்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற செய்திகளை குறைத்து மதிப்பிட வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்து அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

எந்தவொரு விடயத்திலும் கவனயீனமாக இருந்துவிட்டு பின்னால் வருத்தப்பட வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார். (ம)


## ஆசிரியர் தேவை

புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக தரம் 6–11 வரை தமிழ், விஞ்ஞானம், கணிதம் உட்பட சகல பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவைப்படுகின்றனர்.

தெல்லிப்பளை - 077 834 3666
விசுவமடு - 076 004 4882

(11366)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
26 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
(நிலப்பரப்பு)

- A32, A9 இணையும் பிரதான வீதியில் (ரவுண்டப் வோட்)
- A9 வீதியுடன் 7 பரப்பாகவும் 6 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 814 7389, 077 241 7589 - ஜெயம்

(11414)



## அறை வாடகைக்கு

பணியாற்றும் அல்லது கல்வி பயிலும் பெண்களுக்கான அறை வாடகைக்கு உண்டு. ஈச்சமோட்டை வீதிக்கு அருகாமையில் சுவாமியார் வீதியில் அறை வாடகைக்கு உண்டு. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், CCTV Camera, TV வசதிகளுடன்) உணவு, போக்குவரத்து போன்றவற்றை மேலதிகசேவையாகபெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 472 4075

(11415)



## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் - 06 - 11 → வரலாறு
06 - A/L → புவியியல்
06 - 08 → தமிழ்
(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.)

075 446 5015

(11398)



## 30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English with Grammer

DVD - 1000/=

077 088 5678

(11388)



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்
## 51 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11417)

தொடர்பு
077 288 0152, 077 623 4204, 076 658 3621


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.